**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2023 ம் வருடம் செப்டம்பர் திங்கள் 29 ம் நாள் வெள்ளிகிழமை

**இ.ம.எண்.03/2023 இன் அ.வ.எண்.276/2018**

R.நடராஜன் அவருக்காக
பொது அதிகார முகவர்கள்
1) K.காளை பழனியப்பன்
2) R.சேகர் ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

ஆணையர் பொள்ளாச்சி நகராட்சி ... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 20.09.2023 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.A.கனகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் நகராட்சி வழக்கறிஞர் திரு.T.மருதராஜ் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**ஆணையுரை**

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை அசல் வழக்கில் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மனுதாரர்கள் தரப்பு ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார். அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் சான்றிட்ட நகலை பெற மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில்

விண்ணப்பித்திருந்து, அதன் சான்றிட்ட நகல்கள் தற்போதுதான் கிடைக்கபெற்றது. மேற்படி ஆவணங்கள் மனுதாரர்கள் வழக்கை நிரூபிப்பதற்கு முக்கியமான ஆவணங்கள் ஆகும். ஆகவே, மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்காவிடில் மனுதாராகளுக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும். எனவே, மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர் தரப்பில், வழக்கு 2018ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் தற்போது வரை சாட்சி விசாரணை செய்யப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில் ஆவணங்கள் தாக்கல் செய்ய அனுமதி கோரியுள்ளது சட்டப்படி செல்லாது. மேலும், மேற்படி ஆவணங்கள் வழக்குடன் தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்ய கோருவது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல. அசல் வழக்கை காலதாமதப்படுத்தவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

6) <u>**பிரச்சினை**</u> :

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கானதுவழக்கு 2018ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கில் தற்போது வரை சாட்சி விசாரணை செய்யப்படவில்லை

என்றும், இந்நிலையில் மனுவில் ஆவணங்கள் தாக்கல் செய்ய அனுமதி கோரியுள்ளது சட்டப்படி செல்லாது என்றும், அசல் வழக்கை காலதாமதப்படுத்தவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் எதிர்வாதம் வைக்கப்பட்டுள்ளது.

**7)** விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் எழுவினாக்கல் வனையப்பட்டு, விசாரணைக்காக வழக்கு பட்டியலிடப்பட்ட நிலையில் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் பெயரிலுள்ள நில அளவை பதிவேடு சான்றிட்ட நகல், வீட்டுவரி ரசீது சான்றிட்ட நகல், பட்டா பாஸ்புக் சான்றிட்ட நகல் என்பதும், 03.10.1973 மற்றும் 24.12.1977 தேதிகளுடைய கிரையப்பத்திரங்கள் என்பதும் தெரியவருகிறது. மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யப்படுவதாலேயே அவைகள் நிரூபிக்கப்பட்டு விட்டதாக கருத இயலாது.

**8)** இவ்வழக்கை பொறுத்தவரை இந்நீதிமன்றமே முதற்கட்ட விசாரணை நீதிமன்றமாகும். எனவே, இரு தரப்பிலும் சொல்லப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலனை செய்ததில், மேற்படி ஆவணத்தின் தொடர்புடைமை மற்றும் செல்லுபடி தன்மைக்கு உட்பட்டு (Subject to Proof and relevancy of document) அவற்றை தாக்கல் செய்ய அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என கருதி, அதன்படியே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகின்றது. எனினும், எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டகால விரயத்தை மனுதாரர்கள் செலவு தொகை செலுத்துவதன் மூலம் ஈடுகட்ட வேண்டும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு செலவுத் தொகையாக ரூ.750/–ஐ வரும் 10.10.2023 தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ மனுதாரர்கள்/வாதிகள் செலுத்தும்பட்சத்தில், இம்மனு அனுமதிக்கப்படும். அழைக்க: 10.10.2023.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை என்னால் இன்று (29.09.2023) அவையறிய பகரப்பட்டது.

N BHARATHIRAJAN
Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2023.09.29 17:37:48 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

..... இல்லை .....

N BHARATHIRAJAN
Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2023.09.29 17:37:55 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**அசல் ஆணையுரை**
இ.ம.எண்.03/2023 இன் அ.வ.எண்.276/2018
நாள் : 29.09.2023
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---